பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 22 வியாழக்கிழமை 10.10.2019 கதிர் 339

**இனி இது ரகசியம் அல்ல!**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைஎப்படிஎதிர்கொள்வதுஎன்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாலை சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது. பக்கம் 02

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவு!

## வேட்பாளர் எவரையும் ஆதரிப்பதாயின் அதற்கு நிபந்தனையும் விதிக்கின்றார் கஜேந்திரகுமார்



-எஸ்.நிதர்ஷன்-

**யாழ்ப்பாணம்,ஒக்டோபர்10**

**இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பதே ஒரே மார்க்கம் என்று கூறியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எனினும் அந்த முடிவை மீள்பரிசீலனை செய்வதாயின் அதற்குத் தென்னிலங்கைத் தரப்புகள் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளின் பட்டியல் ஒன்று தயார் என்றும் தெரிவித்திருக்கின்றார்.**

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜனப் பெரமுன சார்பில் போட்டியிடும் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸஆகிய இரு பிரதான வேட்பாளர்களும் தமிழ்த் தரப்புக்களுடன் எந்தவித எழுத்துமூல உடன்படிக்கைகளோ அல்லது ஒப்பந்தங்களோ செய்து கொள்ளப் பக்கம் 03

## இ.தொ.காவும் கோட்டா பக்கம்!

கொழும்பு,ஒக்.10

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளதாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

பக்கம் 03

## சஜித்துக்கு ரோஹித ஆதரவு!

கொழும்பு, ஒக். 1

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான ரோஹித போகொல்லாகம ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பக்கம் 02

## சு.க. - பெரமுன சு.க. - கோட்டா ஒப்பந்தம் இன்று

கொழும்பு,ஒக்.10

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுக்கிடையிலானபுரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

பக்கம் 03

# கோட்டாவை ஆதரிக்க கடைசியில் சு.க. முடிவு!



கொழும்பு,ஒக்.10

நீண்ட அரசியல் இழுபறிக்குப் பின்னர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒருவாறு முடிவு செய்து அறிவித்திருக்கின்றது.

அந்தக் கட்சியின் மூத்த தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் பக்கம் 03

## இந்தத் தேர்தலில் மைத்திரியார் நடுநிலையாம்! சு.க.தலைமையையும் தற்காலிகமாகத் துறந்தார்

*பேராசிரியர் றோகண லக்ஷ்மன் பியதாச பதில் தலைவர்*





கொழும்பு,ஒக்.10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகியிருக்கவும், ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்கவும் முடிவு செய்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு, கோட்டாபயராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்திருக்கும் நிலையிலேயே, மைத்திரிபால சிறிசேன இந்த முடிவை எடுத்துள்ளார்.

இதையடுத்து, ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரைவ் – நவம்பர் 17ஆம் திகதி வரை, பேராசிரியர் பக்கம் 02

*ஜனாதிபதித் தேர்தலில் நான் வென்றால்*

## சிறைகளிலுள்ள சகல படையினருக்கும் நவம்பர் 17ஆம் திகதி காலை விடுதலை!

அநுராதபுரத்தில் சிங்கள மக்கள் மத்தியில் கோட்டா உறுதி



கொழும்பு, ஒக். 10

எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெற்றால் போலியான குற்றச்சாட்டுக்களின் கீழ் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இராணுவத்தினரையும் மறுநாள் 17ஆம் திகதி காலை விடுதலை செய்வேன். பக்கம் 03

## கோட்டாவை ஆதரிக்கும் முடிவுக்கு சந்திரிகா முழுமையாக எதிர்ப்பாம்!



பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கும் சு.கவின் முடிவுக்கு, அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பக்கம் 02

## சஜித்துடன் கைகோர்த்த ஏக்கநாயக்க திடீர் 'பல்டி'

கோட்டாவுடன் நேற்று சங்கமம்



கொழும்பு, ஒக். 10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பிரதி அமைச்சர் டபிள்யூ.பி. ஏக்கநாயக்க, கடந்த வாரம் ஐக்கிய தேசியக் பக்கம் 02

## மஹிந்தவை விமர்சித்த துமிந்த கோட்டாபயவுடன் சேர்ந்தார்!



கொழும்பு, ஒக். 10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்கவும் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். பக்கம் 02

# கோட்டா - சஜித் - அநுரகுமார மூவருடனும் நேரில் சந்தித்துப் பேச கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, ஒக். 1

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்களான கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகிய மூவருடனும் நேரில் பேசித் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அவர்களது நிலைப்பாடுகள், அவற்றை நிறைவு செய்வதில் அவர்களுக்குள்ள பற்றுறுதி ஆகியவை குறித்தெல்லாம் அறிந்து கொள்வது –

அதன்பின்னரே இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எத்தகைய அணுகுமுறையை கையாள்வது என்பது சம்பந்தமாகத் தீர்மானிப்பது –

– இவ்வாறு நேற்றுக் கொழும்பில் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வருகின்றது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா எம்.பி., செயலாளா துரைராசசிங்கம், புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி., ஆர்.ராகவன், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சுரேந்திரன்(சுரேன்) ஆகியோரும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் பங்கு பற்றினர்.

மூன்று முக்கிய வேட்பாளர்களுடனும் பேசிய பின்னரே ஒரு முடிவு எடுப்பதும் என்றும் –

அந்த முடிவை எடுப்பதில் அவரசம் காட்டுவதில்லை என்றும் – அங்கு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

மிகுந்த போட்டியான இந்தத் தேர்தலில் எந்த வேட்பாளரும் தனித்து 50 வீத வாக்குகளைப் பெறமுடியாமல் போகலாம் என்றும்–

ஆகையால் முதல் இரண்டு பேரைத் தவிர்த்து ஏனையோருக்கு வாக்களிப்பவர்களின் அடுத்தடுத்த தெரிவுகளே அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் அதிக பங்கைச் செலுத்தக் கூடும் என்றும் –

சம்பந்தன் ஐயா இந்தக் கூட்டத்தில் விளக்கினார் எனவும் அறியவந்தது.

அதனால், ஜே.வி.பியும், முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்காவும் தமது வாக்காளர்களுக்கு தமக்கு அடுத்த தெரிவாக யாருக்கு வாக்களிக்கப் பரிந்துரைக்கிறார்கள் என்பதும் முக்கியமானது என அவர் விவரித்தார் என்றும் கூறப்பட்டது. (உ)

## பூஜித், ஹேமசிறி இருவரும் 18 வரை விளக்கமறியலில்!



முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்ணாண்டோ, கட்டாயவிடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோரை ஒக்ரோபர் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் வழங்கிய பிணை அனுமதியை இரத்து செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டதை தொடர்ந்து, தலைமை நீதவான் லங்கா ஜெயரத்ன இந்த உத்தரவை பிறப்பித்திருந்தார்.

ஜெயசுந்தர மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை பிணையில் விடுவிப்பதற்கான பிரதான நீதவானின் முடிவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த சீராய்வு மனுவை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்றம் இருவரது பிணையையும் இரத்து செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 12ஆம் பக்கத்தில்)

## பிரபல கராத்தே ஆசிரியரை புதுக்குடியிருப்பில் காணோம்



முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பகுதியில் பிரபல தற்காப்பு (கராத்தே) கலை ஆசிரியர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆசிரியர் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் இருந்து வெளியே சென்றிருந்தார். நேற்று வரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பிற்பகல் புதுக்குடியிருப்பு கொண்டலடி பிள்ளையார் ஆலய வீதிப் பகுதியில் ஆசிரியரின் மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சஜித்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும்தத்தமதுவேட்பாளருக்கான ஆதரவைத்திரட்டும்செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

அந்த வகையில் முக்கிய அரசியல்வாதிகள் தாங்கள் ஆதரவு வழங்கப்போகும் ஜனாதிபதி வேட்பாளரின் பெயரை அறிவித்து வருகின்றனர்.

இந்தநிலையில் ரோஹித போகொல்லாகம, சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவுள்ளார் எனதாக நேற்றுத் தெரிவித்துள்ளார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசு, ரெலோ, புளொட் தலைவர்கள் என்று கூடி மந்திராலோசனை நடத்தினர்.

பெருங்கட்சிகள் இரண்டின் வேட்பாளர்களுக்கும் நிபந்தனை விதித்து, உறுதி மொழியை எழுத்தில் பெறுவது இம்முறை சாத்தியமற்றது என்பதைக் கூட்டத்தில் பங்கு பற்றிய அனைவரும் ஒப்புக் கொண்டனர் எனத் தெரிகின்றது.

இரண்டு தரப்புகளும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் வரை எந்தப் பக்கமும் அணி சேராமல் இரண்டு தரப்புகளுடனுமே சந்திப்புகள், ஊடாட்டங்களைத் தொடர்வது–

அந்த ஊடாட்டங்கள், பேச்சுகள் மூலம் இரண்டு தரப்புகளுக்கும் நம்பிக்கையூட்டி, அவையவற்றின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தீர்வுக்கான வாய்ப்புகளை எழுத்தில் வரப் பண்ணுவது –

கடைசி நேரத்தில் நிலைமையைப் பார்த்து ஏதேனும் ஒரு பக்கத்துக்கு சார்பான நிலைப்பாட்டை, அப்போதைய களச் சூழல்கள், எதிர்வு கூறல்களின் அடிப்படையில் எடுத்து அறிவிப்பது –

– இதுதான் கூட்டமைப்பின் இப்போதைய தந்திரோபாய உத்தி.

எந்தத் தரப்பிடமிருந்தும் எழுத்தில் உறுதிமொழியை பெறக் கூடிய களச் சூழல் இல்லாமையால், தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவற்றை இயன்றவரை வரப் பண்ணுவது – அதுவும் இரண்டு தரப்புகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் வரப்பண்ணுவது தான் – இப்போதைய ஒரே உத்தி என்றால் அதைப் பெறும் வரை இரண்டு தரப்புகளுக்கும் நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் – அத்தரப்புகள் நம்பிக்கை இழக்காத வகையில் – இரண்டு தரப்புகளுடன் வாய்ப்பேச்சுக் கொடுத்து நம்பிக்கையூட்டி இழுத்தடிக்க வேண்டும்.

சுமந்திரன் சட்டத்தரணி அல்லவா? அதுவும் ஜனாதிபதி சட்டத்தரணி அல்லவா? இந்த வேலையைக் கனகச்சிதமாகக் கையாண்டு இரு தரப்புகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் வரும் வரை இரு தரப்புகளும் நம்பிக்கை ஊட்டும் விதத்தில் பேசி வெற்றிகரமாக இழுத்தடிப்பார் என நம்பலாம்.

நேற்றைய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இன்னொரு சார்ச்சையும் இழுபறியாகக் காணப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் அங்கம் வகித்த ரெலோ உறுப்பினர் ஒருவர் இராஜனாமாச் செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தமது ரெலோ சார்பில் ஒருவரை நியமிக்காமல் தமிழரசுக் கட்சி தனது மகளிர் அணிச் செயலரை நியமித்து விட்டது என்று தெரிவித்து ரெலோ தலைவர் செல்வம் நேற்றைய கூட்டத்தில் கொட்டித் தீர்த்தார் என்று தகவல்.

புதிய நியமனம் பெற்ற தமிழரசு மகளின் அணிச் செயலாளர் பிரதேச சபை உறுப்பினர் பதவியையும் சத்தியப்பிரமாணம் செய்து ஏற்றுக்கொண்டும் விட்டார்.

இதற்கிடையில் பிரதேச சபைக் கூட்டம் இன்று நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு சமரசத் தீர்வு எட்டும் வரை அந்தப் பிரதேச சபையின் புதிய உறுப்பினரான அந்தப் பெண்மணியை சபை அமர்வில் பங்கு பற்றாமல் தவிர்க்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றது. அதற்கான வழிகாட்டுதலை சம்பந்தப்பட்ட வன்னி மாவட்ட கூட்டமைப்பு எம்.பியான சிவமோகன் வழங்கியிருக்கிறார்.

இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று தெரியாமல் தலையைப் பிய்த்துக்கொண்டு தள்ளாடுகிறாராம் அவர். பாவம் சிவமோகன் எம்.பி.!

-மின்னல்-

### சஜித்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்த நிலையில் நேற்று முன் தினம் ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கின்றார் என அறிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் முதலாவது பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட டபிள்யூ.பி. ஏக்கநாயக்க தனது ஆதரவை ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபபக்ஷவுக்கு வழங்குகிறார் என அறிவித்தார்.

மூத்த அரசியல்வாதிகளான டபிள்யூ.பி. ஏக்கநாயக்க மற்றும் அதாவுத செனவிரத்ன ஆகியோர் கடந்த 2ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் அமர்ந்திருந்து ஊடகவியலாளர் சந்திப்பையும் கொழும்பில் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### கோட்டாவை ஆதரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்க எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது

இந்த முடிவுக்கு சந்திரிகா தலைமையில் இயங்கும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

மேலும் கோட்டாவுக்குத் தனது ஆதரவை வழங்கப்போவதில்லை என சந்திரிகா கூறியுள்ளார் எனவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் சந்திரிகா குமாரதுங்க, தனது எதிர்கால நிலைப்பாடு குறித்து எதுவும் தெரிவிக்காமல் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளமையால், அவருக்கு ஆதரவான கட்சியின் அமைப்பாளர்கள், அலுவலர்கள் குழப்பமடைந்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது

### இந்தத் தோதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோகண லக்ஷ்மன் பியதாசவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராகவும் அவர் நியமித்துள்ளார்.

பேராசிரியர் றோகண லக்ஷ்மன் பியதாச, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பரப்புரைகளுக்கான ஒழுங்குகளைக் கவனிப்பார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரைகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியே மேற்கொள்ளும். எனினும் பொதுஜன பெரமுனவின் மேடையில் பரப்புரைகளை மேற்கொள்ளாது.

ஆயினும் நேற்று அனுராதபுரவில் நடந்த கோட்டாபய ராஜபக்ஷவின் முதல் பரப்புரைக் கூட்டத்தில், துமிந்த திசநாயக்கவும், வீரகுமார திசநாயக்கவும் பங்கேற்றனர்.

ஜனாதிபதித்தேர்தலில் நடுநிலை வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த எதிர்பாராத முடிவு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் நிச்சயமற்ற நிலையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

### மகிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பதாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முற்பகல் அறிவித்திருந்தது. இந்தநிலையில், நேற்று நண்பகல் அநுராதபுரத்தில் உள்ள ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் துமிந்த திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார் கோட்டாபய ராஜபக்ஷ.

சு.கவின் தீர்மானத்துக்கமைய ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்குத்தான் ஆதரவு வழங்கவுள்ளார் என இந்தச் சந்திப்பின்போது துமிந்த திஸாநாயக்க உறுதியளித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களின் வாக்குகளையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பெற்றுக் கொடுத்து அவரை அமோக வெற்றியடையச் செய்வதாகவும் துமிந்த திஸாநாயக்க இதன் போது மேலும் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை துமிந்த திஸாநாயக்க கடந்த காலங்களில் கடுமையாக விமர்சித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்த் தேசிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை எனத் தங்கள் நிலைப்பாடுகளைத் தெளிவாகக் கூறியிருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இந் நிலைமையானது தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமலே தாம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறலாமென்ற முழு நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் உள்ளார்கள் என்பதைத் தான் காட்டுகிறது என்றார்.

ஆக, அவர்கள் எங்களுக்கு இனி எந்த உத்தரவாதத்தையும் தரப்போவதில்லை. ஆகையினால் எங்களுக்காக அவர்கள் எதனையும் செய்ய இயலாத இடத்தில் அவர்களில் யாருக்கும் எங்கள் ஆதரவை நாங்கள் வழங்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே நாங்களாகவே ஒருவருக்கு ஆதரவை வழங்குவதை விடுத்து, இத்தேர்தலை நாங்கள் பகிஷ்கரிப்பதே சிறந்தது. அவ்வாறு பகிஷ்கரிப்பதென்பது யாரையும் ஆதரிப்பதாக அமையாது. ஆகையினால்தான் எங்களுக்கு முக்கியமில்லாத இத் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்று நாம் கோருகின்றோம் – என்றும் அவர் சொன்னார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ் கொக்குவிலுள்ள தமது கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை மாலை நடத்திய ஊடக சந்திப்பின் போதே இவற்றைத் தெரிவித்துள்ளார். அச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்கள் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்கள். அவர்களுடைய கருத்துக்களைப் பார்த்தால் பிரதானமாக மூன்று கட்சிகளின் வேட்பாளர்கள் நிலைப்பாடு பொதுவானதாகவே உள்ளது.

இலங்கை சிங்கள, பௌத்த நாடு என்ற விடயமும் அதற்கு மேலதிகமாக பிரதான இரண்டு கட்சியினரும் இலங்கை என்ற நாடு ஒற்றையாட்சி நாடாக மட்டும்தான் இருக்கமுடியும், அந்த ஒற்றையாட்சித் தன்மையை பலப்படுத்துவதுதான் தமது நோக்கம் என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலை யுத்தம் என்ற விடயத்தில் அவர்களைப் பொறுத்தவரையில் இந்த நாட்டைக் காப்பாற்றிய ஒரு விடயமாக மட்டுமே அதைப் பார்க்கின்றார்கள். அதில் போரிட்ட இராணுவமும் முப்படையினரும் போர் வீரர்கள் என்றும், அப்போர் வீரர்களை எக்காரணம் கொண்டும் எந்த நீதிமன்றத்திலும் நிறுத்தி விசாரிப்பதற்கும் தாங்கள் தயார் இல்லை என்றும், அவர்களுடைய கௌரவத்தை இன்னும் உறுதிப்படுத்துவதுதான் தங்கள் நோக்கம் என்றும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

இந்தப் பின்னணியில் தமிழ் மக்கள் எங்களைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

அதாவது அரசியல் தீர்வு. அதில் விசேடமாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த்தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற – தமிழ்த் தேசத்தின் இறைமை அடிப்படையிலான – ஒரு சமஷ்டித் தீர்வுதான் எங்களுக்குத் தேவையான விடயம். இதன் மூலம் மட்டும்தான் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் கட்டமைப்பு சார்ந்த இன அழிப்பிலிருந்து எமது மக்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

அடுத்ததாக – ஏற்கனவே இடம்பெற்றிருந்த முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போன்ற அத்தகைய சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கு நாங்கள் நடந்த குற்றங்களுக்கு பொறுப்புக் கூறலை நிலைநாட்டியே ஆக வேண்டும். அவ்வாறு செய்வதே எதிர்காலத்தில் யாரும் கடந்த காலத்தைப் போன்று தமிழ் மக்களை அழிக்கலாம் என்று நினைக்காமல் எச்சரிக்கை செய்யும். பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கும் செயற்பாடு அத்தகைய எச்சரிக்கையாக அமையும்.

இவை இரண்டும்தான் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இன்று நடக்கும் அத்தனை நடவடிக்கைகளுக்கும் தீர்வைக் கொடுக்கும். இதில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை.

ஆனால், இவை எதனையும் கருத்திற்கொள்ளாது, சிங்கள வேட்பாளர்கள் நேர் எதிரான செயற்பாடுகளாகத் தங்கள் வேட்பாளர்கள் அறிமுகப்படுத்திய மாநாடுகளில் தீர்மானங்களை எடுத்துள்ளார்கள். அதுமட்டுமன்றி எந்தவிதமான நிபந்தனைகளுக்கும் இனங்கப் போவதில்லை எனவும், எவருடனும் எந்தவிதத்திலும் ஒப்பந்தங்கள், எழுத்து மூல உடன்படிக்கைகள் செய்யத் தயார் இல்லை எனவும் அறிவித்துள்ளனர்.

இத்தகைய நிலையில் தமிழ் மக்களுக்கு யோசிப்பதற்கு ஒன்றுமேயில்லை. நாங்கள் தமிழ் மக்களுடைய நலன்கள் என்று பார்ப்பதனால் எங்களுக்கு இந்தத் தேர்தலில் எவ்விதமான அக்கறையும் இருக்க முடியாது. எங்களுக்குரிய தேர்தல் இதுவல்ல என்பதுதான் இன்றைக்குள்ள யதார்த்தம். எனவே எங்களுடைய அமைப்பின் நிலைப்பாடு இந்தத் தேர்தலை பகிஷ்கரிப்பது என்பது தான். அதுவே எமது முடிவு. இதற்கு மாற்று வழி எதுவும் இல்லை.

ஆனால் பகிஷ்கரிப்பு என்ற விடயம் கடும் போட்டி ஏற்படுகின்ற வேட்பாளர்கள் மத்தியில் அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற முடிவாக இருக்கலாம். தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமல் வெற்றியடைய முடியாத நிலைமை பகிஷ்கரிப்பு என்ற முடிவு உருவாக்க முடியும்.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் தேவையாக இருந்தால்–எங்களுடைய பகிஷ்கரிப்பில் மாற்றங்களை செய்வதாக இருந்தால் – நாங்கள் எத்தகைய அடிப்படையில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை எங்களுடன் இணங்குகின்ற தரப்புகளுடன் தெளிவுபடுத்துவதற்கு நாங்கள் எழுத்து மூலம், குறிப்பாக தமிழ் மக்களுக்கு அடிப்படை தேவையாகவுள்ள தீர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணி விடுவிப்பு, ஆக்கிரமிப்புக்களைத் தவிர்த்தல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைத்தல் போன்ற விடயங்கள் அடங்கிய விவரம் ஒன்றை எழுத்து மூலமாகத் தயாரித்துள்ளோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் வேட்பாளர்கள் முக்கியமில்லை. அவர்கள் நம்பக்கூடியவர்கள் அல்லர். தேர்தலில் போட்டியிடுபவர்கள் என்பதால் அவர்கள் எதனையும் கூறலாம். ஆனால் வேட்பாளர்களுக்குப் பின்னால் இருக்கக்கூடிய – குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாஸவைப் பொறுத்தவரையில் அவருக்குப் பின்னாலுள்ள மேற்கு நாடுகள் மற்றும் இந்திய சக்திகள், கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பின்னாலுள்ள சீனா போன்ற தரப்புக்கள் சர்வதேச சக்திகளாக இருக்கின்றன.

ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் வல்லரசுகள்தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன. எனவே தமிழ் மக்களுடைய வாக்குகள் தேவை என்று நினைக்கின்ற வல்லரசுகள்தான் நாங்கள் முன்வைக்கின்ற நிபந்தனைகளைப் பரிசீலித்து, சட்டபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இத்தகைய செயற்பாடு இல்லாமல் எங்கள் அமைப்பு சார்ந்து எங்கள் மக்களை நாம் ஏமாற்ற மாட்டோம்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியை விரும்புகின்றவர்கள், கோட்டாபய ராஜபக்ஷவின் பின்னாலுள்ள சீனத் தரப்புக்களை தோற்கடிக்க விரும்புகின்றவர்கள் நாங்கள் பகிஷ்கரிப்பு என அறிவித்தால் கோட்டாபய ராஜபக்ஷவை வெல்லவைப்பது தான் எமது நோக்கம் என்று கருத்துருவாக்கம் செய்ய முற்படுகின்றார்கள்.

போரை நடத்தித் தமிழ் மக்களை அழித்த கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நாங்கள் ஆதரவு என்று கடந்த 10 வருடமாக சொல்லி வந்த பொய்ப்பிரசாரத்தைத் தொடர்ந்து கூறுவதற்கு முற்படுகின்றார்கள். எங்களுடைய மக்கள் ஆழமாக யோசிக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இரு வேட்பாளர்கள் மத்தியிலும் வேறுபாடு இருக்காது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்ற போது போர் நிறுத்த உடன்பாட்டை கைச்சாத்திட்ட வேளை, இலங்கையில் முப்படைகள் மூன்று மடங்கு பலப்படுத்தப்பட்டன. இந்தப் பலப்படுத்தல் மேற்கிந்திய நாடுகளினால்தான் – ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில்தான் – நடந்தது.

ஆக, ஒரு புறம் போர்நிறுத்த உடன்படிக்கை, மறுபுறம் முப்படையினரின் பலப்படுத்தல் என அவர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். இதே கட்சிதான் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணாவைப் பிரித்தது. போரை வெற்றிகரமாக கொண்டு சென்றதும் இந்தத் தரப்பே. இது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

போர் முடிந்த பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா போட்டியிட்டார்கள். அன்று சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தவர்கள் இன்று நாங்கள் கோட்டாபயவுக்கு ஆதரவு அளிக்கிறோம் எனக் கூறுகின்றார்கள். எங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் கூறுகின்றவர்கள் கோட்டாபயவுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்பதை எங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இதனைத் தெளிவுபடுத்தாது குற்றம் சாட்டுவது மக்களைத் தவறாக வழி நடத்தித் திசை திருப்புவதற்காகக் கூறுகின்ற போலிக் குற்றச்சாட்டாகவே நாம் பார்க்கின்றோம். – என்றார்.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துடன் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து ஓர் இணக்கப்பாட்டிற்காக செயற்படுவது தொடர்பில் உங்கள் கட்சியும் ஈடுபட்டுள்ளதே என்று கேட்டபோது –

இந்தப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற முடிவுதான் பெரும்பான்மையானவர்களால் எடுக்கப்பட்ட முடிவாக இருந்தது. எனினும் எத்தகைய இணக்கப்பாடு தேவை என்பது தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் எழுத்து மூலமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் எமது யோசனைகள் அடங்கிய விவரங்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

ஏனையவர்கள் கொடுத்த விடயங்கள் எமக்குத் தரப்படவில்லை. அவ்வாறு வழங்கப்படக் கூடாது என்ற கருத்துக்களே அங்கு முன்வைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகின்றது. இந்த ஒளிவு மறைவு ஏனென்றே தெரியாதுள்ளது. ஆகவே பொதுவாகப் பேசுகின்ற விடயங்கள் பொதுவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இதில் ஒளிவு மறைவுகளுக்கு இடமிருக்க முடியாது. யாரும் யாரையும் காப்பாற்ற முடியாது. அதே நேரம் யாரும் இதிலிருந்து தப்பிக்கவும் முடியாது. ஆனாலும் தொடர்ந்து சந்திப்புக்கள் நடைபெற உள்ளமையினால் இது தொடர்பில் அதிகம் கூறுவது நாகரிகம் இல்லை. – என்று பதிலளித்தார் அவர்.

## கோட்டாவை ஆத...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கட்சியின் இந்த முடிவை அறிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ள போதும், கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தத் தேர்தலில் பக்கம் சாராமல் செயற்பட முடிவு செய்துள்ளார் எனக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர கூறினார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் முற்போக்கான கொள்கையின் அடிப்படையிலேயே அவரை ஆதரிக்க சுதந்திரக் கட்சி முடிவெடுத்துள்ளது.

இந்த முடிவை எடுத்திருப்பதால், நாங்கள் பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டோம் என அர்த்தமில்லை. வரும் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க மட்டுமே முடிவெடுத்துள்ளோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கோத்தாபய ராஜபக்ஷவுடனும், சிறிலங்கா பொதுஜனப் பெரமுனவுடனும் இரண்டு புரிந்துணர்வு உடன்பாடுகளில் கையெழுத்திடும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மஹிந்த அமரவீர, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா சுதந்திர பொதுஜனக் கூட்டணி என்ற பெயரில் நாற்காலி சின்னத்தில் போட்டியிடும் என்று கூறினார்.

## இ.தொ.கவும்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையக தோட்ட சமூகத்தின் வாக்குகளை கோட்டாபய ராஜபக் ஷ வுக்குப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்வதற்கு, ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பணியாற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், இந்த முடிவு தொடர்பாக இ.தொ.கா. இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

## சு.க. - பெரமுன...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 10.10 மணிக்கு கொழும்பு மன்றக் கல்லூரி மண்டபத்தில் இது இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவை வழங்கும் ஒப்பந்தமும், கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையுமாக இரு உடன்படிக்கைகள் கைச்சாத்தாகவுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

## சிறைகளில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–ஜனாதிபதித் தேர்தலில் எமக்கான வெற்றி தற்போது உறுதியாகியுள்ளது. நான் ஆட்சிக்கு வந்தால், இராணுவ ஆட்சி வந்துவிடும் என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால், 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர்தான், இராணுவத்தினருக்கான மரியாதையான யுகமொன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்த யுகம் 2015ஆம் ஆண்டு மஹிந்த ஆட்சி மாற்றத்துடன் இல்லாது போனது.

இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினரைத் தண்டிக்கும் ஒரு கலாசாரத்தையே ஐக்கிய தேசியக் கட்சி அரசு முன்னெடுத்து வருகின்றது. போரை நிறைவுக்குக் கொண்டுவந்து, எம்மால் ஏற்படுத்தப்பட்ட சுதந்திரத்தை பத்து வருடங்களுக்குள்ளேயே இந்த அரசு இல்லாது செய்துள்ளது. இதனை மக்கள் மறந்து விடக்கூடாது.

இந்த நாட்டில் மீண்டும் சுதந்திரத்தையும், அச்சமில்லாத சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டியது எனது கடப்பாடாகும். இதனை நான் நவம்பர் 16 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்வேன் என்பதை இவ்வேளையில் கூறிக்கொள்கின்றேன்.

இன்று இந்த நாட்டு மக்கள், 5 வருடங்களுக்கு முன்னர் இருந்த இலங்கையைத் தான் எதிர்பார்க்கின்றார்கள். போலியான குற்றச்சாட்டுக்களின் கீழ் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், போலியான குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐ.தே.க. அரசால் சிறைக்கு அனுப்பப்பட்ட அனைத்து இராணுவத்தினரையும் நான் வெற்றிபெற்றவுடன், நவம்பர் 17ஆம் திகதி காலை விடுதலை செய்வேன் என்பதையும் இவ்வேளையில் கூறிக் கொள்கின்றேன்.

இதற்காக எனக்கு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று பூரணமாக நம்புகின்றேன். அச்சம், சந்தேகம் இல்லாத நாட்டை நாம் உறுதிப்படுத்துவோம்.

இந்த ஒத்துழைப்புடன் சிறப்பான சமூகமொன்றை உருவாக்குவோம். எதிர்கால சந்ததியினருக்கான அழகியதொரு நாட்டை நாம் நிச்சயமாகக் கட்டியெழுப்புவோம் – என்றார்.

இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் இரு கட்சிகளினதும் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பொலிஸாரின் சாக்குப் போக்கு

**பௌத்த பிக்குகளின் அடாவடித்தனத்துக்கு எதிராக இலங்கைப் பொலிஸார் கையாலாகத்தனத்துடன் நடந்து கொண்டிருக்கின்றமையை பொலிஸாரே நேரடியாக வந்து ஒப்புக் கொள்ளுமாற்போல மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் விடயங்கள் ஒப்பேறியிருக்கின்றன.**

**முல்லைத்தீவு, பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் குளத்தில், முல்லைத்தீவு நீதிமன்ற உத்தரவை மீறி பிக்கு ஒருவரின் சடலம் தகனம் செய்யப்பட்ட விடயத்தில் இலங்கைப் பொலிஸாரின் கையாலாகாத்தனம் அம்பலமாகியிருக்கின்றது.**

**பௌத்த, சிங்கள இனவெறிப் போக்காளர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் திராணி இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் இல்லை, அவர்களின் சட்ட அமுலாக்கல் கரங்களான பொலிஸாருக்கும் கிடையாது என்பது நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சம்பவம் மூலம் வெட்ட வெளிச்சமாகியிருக்கின்றது.**

**அந்த இயலாமையை – பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு அடிபணிந்து சரணாகதி அடையும் கையாலாகாத்தனத்திலேயே நாட்டின் பொலிஸ் துறையும் உள்ளது என்ற உண்மையை – வேறு வடிவத்தில், வார்த்தை ஜாலத்தில் – கூறிச் சமாளிக்க முயல்கின்றது பொலிஸ்.**

**"நீராவியடியில் இனமுரண்பாடு ஏற்படக் கூடாதென்பதற்காகவே நீதிமன்ற உத்தரவை மீற இடமளித்துப் பார்த்திருக்க வேண்டியதாயிற்று" – என்ற சாரப்பட, இவ்விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்ற விசாரணையின் போது பொலிஸ் அதிகாரிகள் கூறியிருக்கின்றமை பொலிஸ் துறைக்கே இழுக்கான ஒரு கருத்து வெளிப்பாடாகும்.**

**நீதிமன்ற உத்தரவை மதிக்காமல், தூக்கிக் கடாசி விட்டு அங்கு பிக்குகள் பண்ணிய அட்டகாசமே – அடாவடித்தனமே – இன முரண்பாட்டுக்கு வழிகோலியுள்ளது என்பதையும் முல்லைத்தீவுப் பொலிஸ் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.**

**நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் விடுவதன் மூலம் இனமுரண்பாடு ஏற்படாமல் தவிர்க்க முடிந்தது என்ற பொலிஸாரின் கருத்து, மேற்படி நீதிமன்ற உத்தரவு இனமுரண்பாட்டை ஏற்படுத்தும் வகையிலானது என்ற அர்த்தத்தையும் தந்து நிற்கின்றமையை இந்தப் பொலிஸ் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.**

**இனத்துவேச அடாவடித்தனத்தைப் பண்ணுவோரை – அதுவும் நீதிமன்ற உத்தரவையே தூக்கிக் கடாசி விட்டு அழிச்சாட்டியம் – அட்டூழியம் – பண்ணுவோரை, அந்த வழியில் செயற்பட விட்டுப் பிடித்துத்தான் இனமுரண்பாட்டைத் தவிர்க்கலாம் என்று பொலிஸார் கூறினால், பிறகு எதற்கு அத்தகைய பொலிஸ்? அப்படிச் செயற்படும் ஓர் அமைப்பை 'மக்கள் காவலர்கள்' என்றோ, 'பொலிஸ்' என்றோ கருதலாமா?**

**எங்கிருந்தோ முல்லைத்தீவுக்கு வந்து அட்டூழியம் பண்ணும் சில டசின் பிக்குமாரை, அந்த அடாவடித் தனத்தைச் செய்து முடிப்பதற்கு – அதுவும் நீதிமன்ற உத்தரவை மீறி அட்டகாசம் பண்ணி முடிப்பதற்கு – இடமளித்துத்தான் இனமுரண்பாட்டைத் தவிர்க்கலாம் என்று கூறும் பொலிஸ் நமக்கு எதற்கு? இப்படி பொலிஸ் அதிகாரிகள் கூறுவதற்கு அவர்களுக்கு வெட்கமில்லையா? பொலிஸ் சீருடைகளை அணிந்து கொண்டு வந்துதான் இத்தகைய கருத்துக்களை, இத்தகைய போக்கில் மனித உரிமைகள் ஆணையகத்தின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் அவர்கள் வழங்கினார்களா?**

**சரி, அந்தச் சம்பவத்தின் முடிவில் – சூடு தணிந்த பிறகு – இப்படி நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனப்படுத்தி, புறமொதுக்கி, மீறி காவாலித்தனமாக நடந்து கொண்ட காவியுடைதாரிகள் தொடர்பில் இதுவரை ஒரு துளி நகர்வு கூட முன்னெடுக்காத பொலிஸார், தமது உதாசீனப் போக்குக்கு இப்போது இப்படி வந்து சப்பைக் கட்டுக் கட்டுவது – நியாயம் கூற முற்படுவது – பொலிஸ் துறைக்கே பெருங் கேவலமன்றி வேறில்லை.**

**பொலிஸாரின் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடு, போக்கு, அதற்கான இத்தகைய விளக்கம் ஆகியவை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டுமல்ல, நீதிமன்றம் மட்டுமல்ல, பொலிஸ் ஆணைக்குழுவும் சுயாதீன விசாரணையை நடத்த வேண்டும்.**

**இத்தகைய பொறுப்பற்ற செயல் போக்குக்குக் காரணமான அதிகாரிகள் சட்டத்தின் பிரகாரம் உரிய முறையில் கையாளப்பட வேண்டும்.**

**இல்லையேல், இந்நாட்டில் இனசௌஜன்யம் என்பது நிரந்தரமாகப் பகல் கனவாகிப்போகும்.**

# வேட்பாளராக நிற்பதில்லை என்கிற தீர்மானத்துடனேயே ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்டுப்பணத்தை செலுத்தினேன்

## முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத் விளக்கம்



கொழும்பு, ஒக். 10

கட்டுப்பணத்தை செலுத்துகின்ற பொழுதே வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதில்லை என்கிற முன்முடிவுடனேயே கட்டுப்பணத்தைத் தாம் செலுத்தினார் என்று ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளரும், உற்பத்தி திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகு தாவூத் தெரிவித்து உள்ளார்.

கட்டுப்பணத்தைச் செலுத்திய பின்னர் வேட்பு மனுத் தாக்கல் செய்யாதமை குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டு உள்ளார்.

அவரின் அறிக்கையின் முழு விவரம் வருமாறு: –

நான் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியமை பற்றிய செய்தி ஊடகங்களில் வெளி வந்திருந்தது. நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்பது பற்றியும் செய்திகள் வெளியாகின. எனவே ஏன் கட்டுப்பணம் செலுத்தினேன்? ஏன் நியமன பத்திரம் தாக்கல் செய்யவில்லை? என்பன பற்றி தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

நான் கட்டுப்பணம் செலுத்திய வேளை வேறெந்த சிறுபான்மை அரசியல்வாதிகளும் பணம் செலுத்தியிருக்கவில்லை. பின்னர் பலர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியில் இறங்குவதற்கு முனைந்தனர்.

நான் பணம் கட்டுவதற்கு முன்னரே தமிழ் பேசும் பொது வேட்பாளர் ஒருவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற கருத்தை ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தியிருந்தேன். ஆயினும் இந்தக் கருத்து மக்களையும் குறித்த சிறுபான்மைத் தலைவர்களையும் சென்றடைவதற்கான கால அவகாசம் இருக்கவில்லை.

தமிழ், முஸ்லிம் கட்சிகளும் குடிமைச் சமூக முக்கியத்தர்களும் கூடிப் பேசி பொது முடிவொன்றுக்கு வராமல் தமிழ் பேசும் பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது சாத்தியமில்லை என்பதை நான் முன்னரே உணர்ந்திருந்தாலும் இப்படியான ஒரு பொது வேட்பாளர் பற்றிய கருதுகோள் இத்தேர்தல் காலத்தில் முன்வைக்கப்பட்டு தமிழ் பேசும் அரசியல் அரங்கில் அறியப்படுவது எதிர்காலத்தில் இத்தகைய வேட்பாளர் ஒருவர் களமிறங்குவதற்கான சாதகத்தை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. இக்கருத்து சிறிதளவாவது மக்களைச் சென்றடையக் கட்டுப்பணம் செலுத்தும் செயல் செய்யக்கூடும் என்பதனால்தான் அதனைச் செய்தேன். கட்டுப்பணம் செலுத்தும் போதே வேட்புமனு தாக்கல் செய்வதில்லை என்ற முன் முடிவோடுதான் இருந்தேன்.

2005 ஆம் ஆண்டு வடக்குத் தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்காமல் விட்டமைதான் அவ்வாண்டு மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியது. 2010 ஆம் ஆண்டும் தமிழ் மக்கள் அளித்த வாக்கு வீதம் மிகக் குறைவாக இருந்தமையும், முஸ்லிம் மக்கள் மஹிந்தவுக்கு 2005 ஆம் வருடத் தேர்தலில் வழங்கிய வாக்குகளை விட 2010 இல் அளித்த வாக்குகளில் கனிசமான அதிகரிப்பு காணப்பட்டமையும் அவரை இரண்டாவது முறையும் ஜனாதிபதியாக்கியது. 2015 இல் நடைபெற்ற தேர்தலில் தமிழ்,முஸ்லிம் மக்கள் ஏகோபித்து வழங்கிய மில்லியன் கணக்கான வாக்குகள் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கதிரையில் அமர்த்தின.

ஆனால் 2005 இல் தமிழர் எடுத்த முடிவு தமிழரின் ஆயுதப் போராட்ட அரசியலை முடித்து வைத்தது.முஸ்லிம்களும் அடைந்தது என்று குறித்துரைக்க எதுவுமில்லை. 2010 தேர்தலின் பின்னரான ஐந்து வருட காலத்துள் தமிழ் பேசும் மக்கள் எதனையும் அடையவில்லை. 2015 தேர்தலின் பின்னர் கடந்த சுமார் ஐந்து வருடங்களும் வீணாகிப் போனதை யாவரும் அறிவோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2005 மற்றும் 2010 ஜனாதிபதித் தேர்தலின் ஒழுங்கு தரப்பு நடவடிக்கைகளை நானே தலைமை தாங்கி நடத்தினேன். இவ்விரண்டு தேர்தல்களிலும் ரணில் விக்கிரமசிங்கவும், சரத் பொன்சேகாவும் மாவட்ட அடிப்படையில் வீதாசார ரீதியாக நோக்குகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேதான் அதிகமான வாக்குகளைப் பெற்றனர்.2015 ஆம் ஆண்டுத் தேர்தலில் நான் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போதும் எந்தக் கட்சிக்கோ வேட்பாளருக்கோ ஆதரவாகக் கள வேலைகளில் ஈடுபடவோ எனது வாக்கைத்தானும் வழங்கவோ இல்லை. சிறுபான்மை மக்கள் ஒருசேர ஒரே வேட்பாளருக்கு ஆதரவாக அணி திரண்டிருந்த போதும், கிடைத்திருந்த அநுபவம் காரணமாக எனக்குள் அந்தத் தேர்தல் பற்றி அவநம்பிக்கை துளிர்த்திருந்தமையே மேற்சொன்ன எனது முடிவுக்குக் காரணமாயிருந்தது.

2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் தாம் வாக்களித்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் சிறுபான்மையினர் எவ்வித நன்மைகளையும் அடையப் போவதில்லை; தோற்றுவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்ற எனது நம்பிக்கைதான் தமிழ்பேசும் பொது வேட்பாளர் என்ற கருத்தை வெளியிடக் காரணமாக அமைந்தது.

ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் உணர்ச்சி வசப்பட்டு முடிவு எடுப்பதில் இருந்தும், தாம் ஏமாறுவதற்குப் புதிய வேட்பாளர்களைத் தேடுகிற போக்கில் இருந்தும் எமது சமூகங்கள் விடுபட்டு அறிவுபூர்வமாக முடிவுகளை எடுக்கவும், சிந்தனாபூர்வமான தலைமைத்துவங்களை வருங்காலத்தில் உருவாக்கவும் முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

தமிழ்,முஸ்லிம் மக்களுக்குப் பொதுவான பல பிரச்சினைகளும் வெவ்வேறான சில பிரச்சினைகளும், அபிலாசைகளும் உள்ளன. தமிழ்த் தேசிய அரசியலுக்கும் முஸ்லிம் தேசிய அரசியலுக்கும் சிங்கள பெருந்தேசிய அரசாங்கங்களுடன் உடன்படவும் முரண்படவும் நிறைய விடயங்கள் உள்ளன. இவ்விடயங்களில் சிறுபான்மையினராக இணைந்து உறுதி பெற்று பெரும்பான்மையோடும் வெளிநாட்டு சக்திகளோடும் பேசுவதற்கும், தமிழ், முஸ்லிம் சிறுபான்மைத் தேசியர்களுக்கிடையில் உள்ள பிரச்சினைகளைத் தமக்குள் பேசி முடிவு காண்பதற்கும் தமிழ்பேசும் வேட்பாளர் என்ற எண்ணக்கரு ஒரு புதிய பாதையைத் திறக்கும் என்ற நம்பிக்கையை நான் கொண்டிருக்கிறேன். தமிழ்,முஸ்லிம் அரசியல் உடன்பாடு எட்டப்படாமல் சிறுபான்மையினருக்கு விடிவு இல்லை என்ற எண்ணத்தினால் எனது அரசியல் வாழ்வு நெடுகிலும் இவ்வுறவுக்காகப் பேசியும் எழுதியும் வந்துள்ளேன் என்பதை மக்கள் அறிவார்கள். – என்று உள்ளது.

**நாளை** 11.10.2019 வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி முழுவதும்
திதி : திரயோதசி மு.இ 11.19 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02
சுப நேரம் : 6.02 – 7.32

காலைக்கதிர் Kalaikathir



# மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டார்தெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, பி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப் புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிரட், அண்ணாமலையான் சிறி இராகவேந்திரா என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிரட், எவர்கிறீன் அச்சகம், கன்னாதிட்டி கார்கில்ஸ் பூட்சிற்றி ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# ஆணையை ஒரு தடவை தாருங்கள் நாட்டையே மாற்றிக் காட்டுகிறோம்

## வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஜே.வி.பி. வேட்பாளர் சூளுரை

தம்புத்தேகம,ஒக்.10

நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள அத்தனை அம்சங்களையும் இந்த நாட்டின் உயர் மட்டத்திலிருந்து மாற்றிக் காட்டுவோம் எனவும், இதற்காக ஒரு தடவை மக்கள் விடுதலை முன்னணிக்கு உங்கள் ஆதரவை தந்துபாருங்கள் எனவும் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான ஜாதிக ஜன பலவேகய (மக்கள் சக்தி) கூட்டணியின் – வேட்புமனுத் தாக்கலின் பின்னரான – முதலாவது பிரசாரக் கூட்டம் தம்புத்தேகமவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நாடு சுதந்திரத்தின் பின்னர், பல தரப்பினராலும் சூறையாடப்பட்டு வருகின்றது. முதலில் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள அத்தனை முறைமைகளையும் மாற்ற வேண்டும். கோடிக் கணக்கில் முன்னெடுக்கப்படும் செலவினங்களை ரத்துச் செய்ய



வேண்டும்.

நாட்டிலுள்ள – ஊழலுக்கு வழிகோலும் – முறைமைகளை மாற்றம் செய்யாமல், வெளிநாட்டுக் கடனிலிருந்து மீள முடியாது. நாட்டின் பிரதான இடத்திலிருந்து இதனை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. – என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சங்கானை பிரதேச செயலகப் பகுதியிலுள்ள

# பிரதேச வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவு, தபால் அலுவலகத்துக்கான அடிக்கல் நடுகை விழா

## அத்துடன் வீட்டுத் திட்டம் கையளிப்பு நிகழ்வும்







தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நிதிப்படுத்தலிலும் முன்னெடுப்பிலும் யாழ் மாவட்டத்திலுள்ள சாங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச வைத்தியசாலைக்கான அவசர சத்திர சிகிச்சைப் பிரிவை விஸ்தரிப்பதற்கு ரூபா 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நடுகை விழா கடந்த சனிக்கிழமை அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியால் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான 10,000 வீட்டுத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 390 வீடுகள் ஒதுக்கப்பட்டு 176 வீடுகள் பூர்த்தியாக்கப் பட்டுள்ளன. இவ்வாறு முடிவுறுத்தப்பட்ட வீடுகளில் சில கொடிகாமம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் மக்கள் பாவனைக்காக அமைச்சின் செயலாளா வே. சிவஞானசோதியால் கையளிக்கப்பட்டுள்ளது. மேலும், புனரவாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 327 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 155 வீடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. முடிவுறுத்தப்பட்ட சில வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 180 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 110 வீடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. மயிலங்காடு கிராம சேவையாளர் பிரிவில் முடிவுறுத்தப்பட்ட சில வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்கு 206 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 120 வீடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. முடிவுறுத்தப்பட்ட சில வீடுகள் 5.10.2019 அன்று அமைச்சின் செயலாளரால் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வீட்டுத்திட்ட பயனாளிகளுடனான கலந்துரையாடலின் போது ஒரு வீட்டுக்கு 10 லட்சம் ரூபா வழங்கப்பட்ட போதிலும் சில பயனாளிகள் தமது வீடுகளை தமக்கு ஏற்ற முறையில் வடிவமைத்து விரிவாக்கம் செய்து 2 அறைகளுக்கு மேலதிகமாக அமைக்கின்ற செயற்பாடுகளும் காணப்பட்டன. இவ்வீட்டுத்திட்டம் பயனாளிகளினால் முன்னெடுக்கப்படும் திட்டமாதலினால் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி வழங்கலான ரூபா 10 லட்சத்துக்கு மேலதிகமாக தமது முதலீடுகளையும் செய்து தமது எதிர்காலப் பரம்பரையையும் உள்ள வாங்கிய பொருத்தமான வீடாக கட்டி அமைக்கின்றமை மற்றும் இதன் தரமும் உயாவாகக் காணப்படுகின்றமை திருப்தியாக உள்ளதாகவும் பயனாளிகளினால் வெளிப்படுத்தப்பட்டது.

மேலும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவின் தபால் அலுவலகத்தை ரூபா 80 லட்சம் செலவில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழாவும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. முரளிதரன், வடமாகாண அஞ்சல் மாஅதிபர் திருமதி.மதுமதி வசந்தகுமார், பிரதேச செயலாளர் திருமதி. பிரேமினி பொன்னம்பலம், திட்டப் பணிப்பாளர்கள், உதவி திட்டப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.







யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வீதியோரங்களில் உள்ள வாய்க்கால்களை மறித்து அதன் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டுமானங்களை அகற்றுவதற்கு யாழ் மாநகர முதல்வர் தலைமையிலான குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பகுதிக்கு அண்மையில் நேரடி விஜயம் செய்த யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையிலான குழு குறித்த பகுதிகளில் பொது வடிகால்களின் மீது அமைக்கப்பட்டிருக்கும் கட்டுமானங்களால் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய நேரடி விஜயம் செய்து குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த நேரடி அவதானிப்புக்கு அமைய பொது மக்களுக்கு இடையூறாக உரிய அனுமதி இன்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் கட்டுமானங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நேரடி விஜயத்தில் யாழ் மாநகர பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் இணைந்திருந்தமை விசேட அம்சமாகும்.

# பணய கைதிகளாக சிக்கி இருந்த 3 இந்தியப் பொறியியலாளர்கள் 11 தலிபான்கள் விடுவிக்கப்பட்டமையால் சிறையிலிருந்து மீண்டனர்



இஸ்லாமாபாத்,ஒக்.10

ஆப்கானிஸ்தான் சிறையில் இருந்த 11 தலீபான் தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டதால் பணய கைதிகளாக இருந்த 3 இந்திய பொறியியலாளர்களை தலீபான் இயக்கம் விடுவித்தது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் பாக்லான் மாகாணம் பாக் இ மல் பகுதியில் 2018 ஆம் ஆண்டு மே மாதம் துணை மின்நிலையம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 7 இந்திய பொறியியலாளர்கள் அவர்களது ஆப்கானிஸ்தான் சாரதி ஆகியோர் ஒரு கும்பலால் கடத்தப்பட்டனர். இதற்கு உடனடியாக எந்த இயக்கமும் பொறுப்பேற்க முன்வரவில்லை.

பின்னர் அவர்களை தலீபான் தீவிரவாத இயக்கத்தினர் கடத்தினர் எனத் தெரியவந்தது. அவர்களில் ஓர் இந்தியப் பொறியியலாளர் கடந்த மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டார். சர்வதேச நிறுவனம் ஒன்றுக்காகப் பணிபுரிந்து வந்த அந்த பொறியியலாளர்களை மீட்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்தன.

ஆப்கானிஸ்தான் சமரசத்துக்கான அமெரிக்க சிறப்பு பிரதிநிதி ஜால்மாய் கலில்சாத் மற்றும் முல்லா அப்துல்கனி பராடார் தலைமையிலான தலீபான் இயக்க பிரதிநிதிகள் இருவர் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுகளில் ஈடுபட்டனர். கடந்த வார இறுதியில் இஸ்லாமாபாத் நகரில் இந்தப் பேச்சு நடைபெற்றது.

பேச்சுக்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆப்கானிஸ்தான் சிறையில் உள்ள தலீபான் இயக்கத்தின் 11 உயர்மட்ட உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டனர் என தலீபான் பிரதிநிதிகள் அறிவித்தனர். அதற்கு பதிலாக பணய கைதிகளாக உள்ள 3 இந்திய பொறியியலாளர்கள் விடுவிக்கப்பட்டனர். இதனை அவர்கள் வானொலி மூலம் அறிவித்தனர்.

ஆனாலும் அவர்கள் விடுவிக்கப்பட்டவர்கள் யார்? எங்கு விடுவிக்கப்பட்டனர் என்ற தகவல்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டனர். விடுவிக்கப்பட்ட தலீபான்கள் ஆப்கானிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டவர்களா? அல்லது அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டவர்களா? என்பதையும் தெரிவிக்கவில்லை. விடுவிக்கப்பட்ட தலீபான்களுக்கு வரவேற்பு கொடுப்பதுபோல ஒரு புகைப்படத்தையும் அவர்கள் வெளியிட்டனர்.

காபூல் நகரில் பாக்ராம் ராணுவ தளத்தில் உள்ள மிகப்பெரிய சிறையில் இருந்து தலீபான்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது. அந்தத் தளத்தை அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தான் ராணுவத்திடம் ஒப்படைத்தாலும், இன்னும் அமெரிக்க படைகள் அங்கு உள்ளன. இதனால் தலீபான்களை விடுவித்தவர்கள் யார் என்பது தெரியவில்லை.

ஆப்கானிஸ்தான் இராணுவ அமைச்சகமோ, அதிபர் அலுவலகமோ இதுபற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்க மறுத்துவிட்டன. இந்தியா தரப்பில் இருந்தும் எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

விடுவிக்கப்பட்டவர்களில் தலீபான் தலைவர்களான சேக் அப்துல் ரகிம், மாவ்லாய் அப்துல் ரஷித் ஆகியோரும் அடங்குவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் தலீபான் ஆட்சியின்போது கிளர்ச்சிப் படையின் ஆளுநர்களாகச் செயற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கைதிகள் அறைகளில் 37 கத்திகள் பறிமுதல்

பெங்களூரு, ஒக். 10

பெங்களூரு சிறைச் சாலையில் நேற்று நடத்தப்பட்ட சோதனையின் போது, கைதிகளின் அறைகளில் இருந்து 37 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கர்நாடக மாநிலம் பெங்களூருவை அடுத்த பரப்பன அக்ரஹாரத்தில் மத்திய சிறை உள்ளது. இந்த சிறையில் உள்ள கைதிகளுக்கு தாராளமாக கஞ்சா மற்றும் மது போத்தல்கள் வழங்கப்படுவதாகவும், வெளியில் உள்ளவர்களோடு சரளமாக பேச செல் போன்கள் நடமாட்டம் அதிகம் இருப்பதாகவும் பெங்களூரு மாநகர பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து பெங்களூரு மாநகர குற்றப்பிரிவு உதவி கமிஷனர் சந்தீப் பாட்டீல் தலைமையில் பொலிஸார் நேற்று சிறைக்குச் சென்று கைதிகளின் அறைகளில் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

இந்த சோதனையில் 37 கத்திகள், கஞ்சா புகைக்கும் கருவிகள், செல்போன்கள் மற்றும் சிம்கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. கைதிகளுக்கு இந்தப் பொருள்களை விநியோகம் செய்தவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.




## இராமநாதபுரம் பகுதியில் கடல் நீர் இரு நூறு மீற்றருக்கு உள்வாங்கியது




தமிழ்நாடு இராமநாதபுரத்தில் கடல்நீர் 200 மீற்றருக்கு மேல் உள்வாங்கியது என மீனவர்கள் அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளனர்.

இராமநாதபுரத்தில் உப்பூர் பகுதியில் கடல்நீர் 200 மீற்றருக்கு மேல் உள்வாங்கியுள்ளது. இதேபோன்று இராமேஸ்வரத்தில் சங்குமால் கடற்பகுதியிலும் கடல்நீர் உள்வாங்கியுள்ளது என்ற அதிர்ச்சித் தகவலை மீனவர்கள் தெரிவித்து உள்ளனர்.

இராமேஸ்வரம் துறைமுகக் கடல் பகுதியில் கடந்த ஜூனில் பல அடி தூரம் கடல் உள்வாங்கியது. இதன்பின் அன்று பகல் 3 மணிக்கு மேல் மீண்டும் கடல் நீர் பழைய நிலைக்கு திரும்பியது. இதனால் இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டு செல்லும் எக்ஸ்பிரஸ் மற்றும் பயணிகள் ரயில் சேவை அன்று பகுதியளவு பாதிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், 4 மாதங்களுக்கு பின் அங்கு மீண்டும் கடல்நீர் உள்வாங்கியுள்ள சம்பவம் நடந்துள்ளது.

## ராஜஸ்தானில் நவராத்திரி விழா இறுதியில் சோகம்; துர்க்கை சிலை கரைப்பில் நீரில் மூழ்கி 10 பேர் பலி!



தோல்பூர்,ஒக்10

ராஜஸ்தானில் நவராத்திரி விழாவைமுன்னிட்டு நடந்த துர்க்கை சிலை கரைப்பு நிகழ்ச்சியில் நீரில் மூழ்கி 10 பேர் பலியாகி உள்ளனர்.

ராஜஸ்தானில் நவராத்திரி விழா கடந்த 9 நாள்களாகக் கொண்டாடப்பட்டது. இதனை அடுத்து பல்வேறு அம்மன் கோவில்களில் சிறப்பு பூஜைகளும், அபிஷேகங்களும் நடைபெற்றன. இதற்காக திரளான பக்தர்கள் ஆலயங்களுக்கு வந்திருந்து அம்மனை வழிபட்டு சென்றனர்.

ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி பண்டிகை கொண்டாட்டங்கள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன. இதன்பின் ஆற்றில் துர்க்கை அம்மன் சிலைகளைக் கரைக்கும் நிகழ்ச்சிகள் நடந்தன.

இதில் தோல்பூர் நகரில் உள்ள பார்வதி ஆற்றில் துர்க்கை அம்மன் சிலைகளைக் கரைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் 10 பேர் நீரில் மூழ்கிப் பலியாகினர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# துருக்கியின் விமானத் தாக்குதலில் குர்திஷ் போராளிகள் 9 பேர் சாவு!

ஈராக் நாட்டின் எல்லைக்குள் துருக்கி நடத்திய வான்வழித் தாக்குதலில் குர்திஷ் போராளிகள் 9 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் உள்ள குர்திஷ்தான் தொழிலாளர்கள் கட்சி என்னும் அமைப்பை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.



பெரும்பாலும் ஈராக்கின் வடக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஷ்தான் போராளிகள், கான்டில் மலைப் பகுதியில் முகாம்களை அமைத்துள்ளனர்.

இங்கிருந்தவாறு துருக்கி எல்லையில் பயங்கரவாதத் தாக்குதல்களை அவ்வப் போது நடத்திவருகின்றனர். இவர்களை ஒடுக்கும் பணியில் துருக்கி நாட்டின் விமானப்படைகள் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், ஈராக் நாட்டின் ஹாக்ருக் மற்றும் ஹெப்டென் ஆகிய பகுதிகளில் உள்ள குர்திஷ்தான் போராளிகளை குறிவைத்து துருக்கி நாட்டின் விமானப்படைகள் வான்வழி தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 9 குர்திஷ் போராளிகள் உயிரிழந்தனர் எனத் துருக்கி இராணுவம் தெரிவித்துள்ளது.

# இயற்பியலுக்கான நோபல் பரிசு மூவருக்குக் கூட்டாகக் கிட்டும்!



உலகளவில் மருத்துவம், வேதியியல், இயற்பியல், சமாதானம், இலக்கியம், பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் சாதனை படைப்பவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

இந்த பரிசு 9 லட்சத்து 14 ஆயிரம் டொலர் (இந்தியப் பணத்தில் சுமார் ரூ.6 கோடியே 40 லட்சம்) ரொக்கம், ஒரு தங்க பதக்கம், சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

இந்த ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு கடந்த திங்களன்று சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் அறிவிக்கப்பட்டது.

இந்தப் பரிசை அமெரிக்க விஞ்ஞானிகள் வில்லியம் கலின், கிரேக் செமென்சா, இங்கிலாந்தின் சர் பீட்டர் ரேட்கிளிப் ஆகிய 3 பேரும் கூட்டாகப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

உடலில் உள்ள கலங்கள், பிராண வாயுவை (ஒட்சிஸனை) எப்படி உணர்கின்றன, எப்படி மாறுபடுகிற ஒட்சிஸன் அளவுக்கு ஏற்ப செல்கள் தங்களைப் பொருத்திக்கொள்கின்றன என்பது தொடர்பான கண்டுபிடிப்பை செய்ததற்காக இவர்களுக்கு இந்த ஆண்டின் மருத்துவ நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது என றோயல் சுவீடிஷ் அறிவியல் அகாடமி அறிவித்துள்ளது.

இவர்களது இந்தக் கண்டுபிடிப்பு, அனிமியா என்று அழைக்கப்படுகிற ரத்த சோகைக்கும், புற்றுநோய்க்கும் புதிய சிகிச்சைகளுக்கு வழி வகுக்கிறது.

3 விஞ்ஞானிகளில் வில்லியம் கலின், அமெரிக்காவில் மேரிலாந்து மாகாணத்தில் உள்ள ஹோவார்ட்ஹியூஸ் மருத்துவ இன்ஸ்டிடியூட்டிலும், கிரேக் செமன்சா, மேரிலாந்து மாகாணத்தில் உள்ள ஜோன் ஹாப்கின்ஸ் செல் என்ஜினீயரிங் இன்ஸ்டிடியூட்டிலும், சர் பீட்டர் ரேட்கிளிப் லண்டனில் உள்ள பிரான்சிஸ் கிரிக் இன்ஸ்டிடியூட்டிலும் பணியாற்றுகிறார்கள்.

மொத்த பரிசு பணமான 9 லட்சத்து 14 ஆயிரம் டொலரில் (சுமார் ரூ.6 கோடியே 40 லட்சம்) பாதியை ஜேம்ஸ் பீபிள்ஸும், மீதி பாதியை மைக்கேல் மேயரும், டிடியர் கியூலோஸும் பகிர்ந்து கொள்கின்றனர்.

நோபல் பரிசளிப்பு விழா, ஸ்டாக்ஹோமில் டிசம்பர் 10 ஆம் திகதி நடக்கவுள்ளது. சுவீடன் மன்னர் 16 ஆம் கொரல் குஸ்டாப், நோபல் பரிசுகளை வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

# ஆப்கானில் விமானத் தாக்குதலில் அல்கொய்தா தலைவர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் விமானப்படை நடத்திய தாக்குதலில் அல்கொய்தா தலைவர் உட்பட 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மற்றும் அல்கொய்தாபோன்ற அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. அந்த அமைப்புகளை ஒடுக்கும் நோக்கில் ஆப்கானிஸ்தான் அரசுபடைகளுடன் இணைந்து அமெரிக்க படைகளும் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதல் நடத்திவருகின்றன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் தெற்கு ஹெல்மாண்ட் மாகாணத்தில் உள்ள மூசா ஹலா மாவட்டத்தில் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் என இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அமெரிக்கா - ஆப்கானிஸ்தான் விமானப் படைகள் இணைந்து நடத்திய அதிரடி தாக்குதலில் அல்கொய்தா அமைப்பின் இந்தியத் துணைக் கண்டத்தின் தலைவர் அசிம் உமர் உள்பட 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியா - பாக். பேச்சு மூலமே காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு!

## உறுதியாகக் கூறுகின்றது சீனா

காஷ்மீர் பிரச்சினைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் இருதரப்பு ரீதியில் பேச்சு மூலம் தீர்வு காண முயல வேண்டும் என சீனா கருத்து வெளியிட்டுள்ளது.

சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் நேற்றுமுன்தினம் சீனாவுக்கு சென்றார். இந்நிலையில், சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் கெங் சுவாங் நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு: -

இந்தியாவும், சீனாவும் மேல்மட்டத்தில் தொடர்பு வைத்துக்கொள்ளும் பாரம்பரியம் கொண்ட நாடுகள். உயர்மட்டத்தில் தகவல் பரிமாற்றம் நடந்து வருகிறது. இரு நாடுகளும் வளர்ந்து வரும் பெரிய நாடுகள். இருதரப்பு உறவு நல்லமுறையில் வளர்ச்சி கண்டுள்ளது.



காஷ்மீர் பிரச்சினை பற்றிய எங்கள் நிலைப்பாடு தெளிவானது. அதற்கு இந்தியாவும், பாகிஸ்தானும் இருதரப்பு ரீதியில் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும். அதுதான் இரு நாடுகளுக்கும் நல்லது. இவ்வாறு அவர் கூறினார்.

ஐ.நா. தீர்மானம் அடிப்படையில் தீர்வு காண வேண்டும் என்று முன்பு ஒருமுறை சீனா தெரிவித்தது. ஆனால், அந்த நிலைப்பாட்டை தற்போது அது கைவிட்டு விட்டது.

# 450 கோடி ரூபாவுக்கு ஏலம் போன ஓவியம்!

ஹொங்கொங், ஒக்.10

ஹொங்கொங்கில் ஓவியம் ஒன்று சுமார் ரூ.450 கோடிக்கு (இலங்கை பணப் பெறுமதியில்) ஏலம்போனது.



ஹொங்கொங்கில் ஓவியங்கள் ஏல விற்பனை நடைபெற்றது. இதில் ஜப்பானைச் சேர்ந்த பிரபல ஓவியக்கலைஞர் யோஷிடோமா நாரா வரைந்த ஓவியமும் இடம்பெற்றது. 'நைவ் பிகைன்ட் பேக்' என்ற தலைப்பில் வரையப்பட்ட சிறுமியின் ஓவியம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

பெரிய கண்களுடன் முறைத்துப் பார்ப்பது போல நிற்கும் சிறுமியின் ஒரு கை மட்டுமே வெளியே தெரியும். மற்றொரு கை முதுகு புறமாக மறைத்து வைத்திருப்பது போல ஓவியம் வரையப்பட்டிருக்கும். அந்தச் சிறுமி தன் முதுகுக்கு பின்னால் மறைத்து வைத்திருக்கும் கையில் என்ன வைத்திருப்பாள்? என்ற கேள்வியுடன் ஏலம் தொடங்கியது.

ஏலம் தொடங்கிய 10 நிமிடத்திற்குள் அந்த ஓவியம் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (இலங்கை ரூபா மதிப்பில் சுமார் 450 கோடி ரூபாவுக்கு) ஏலம் போனது. யோஷி டோமா நாரா வரைந்த ஓவியங்களிலேயே அதிக தொகைக்கு ஏலம் போன ஓவியம் இதுதான்.

இது குறித்து ஏல ஏற்பாட்டாளர்கள் கூறுகையில் - யோஷிடோமா நாராவின் 'நைவ் பிகைன்ட் பேக்' ஓவியத்தை பெற 6 பேர் போட்டி போட்டுக்கொண்டு ஏலம் கேட்டனர். இறுதியில் ஏலம் அறிவித்த தொகையை விட 5 மடங்கு அதிகமான விலையில் அந்த ஓவியம் ஏலம் போனது. - எனக் கூறினர்.

# பிரிந்து சென்ற காதலியை குடும்பத்துடன் சேர்த்து சுட்டுக்கொலை செய்த வாலிபரின் வெறிச்செயல்!

## ஐவர் உயிர் பறிப்பு; ஆஸ்திரேலியாவில் பயங்கரம்

ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள அந்நாட்டின் 5 ஆவது மிகப்பெரிய நகரமான இன்ஸ்பார்க் நகரைச் சேர்ந்தவர் ஆன்ட்ரியாஸ் (வயது 25). இவரும் அதே பகுதியைச் சேர்ந்த நாடின் ஹின்டர்ஹோல்சர் (19) என்ற இளம் பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்தனர். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கருத்து வேறுபாடு காரணமாக நாடின் ஹின்டர்ஹோல்சர், ஆன்ட்ரியாஸைப் பிரிந்து சென்றார். அதன் பிறகு நாடின் ஹின்டர்ஹோல்சர், ஐஸ் ஹொக்கி விளையாட்டு வீரரான புளோரியான் ஜானி (24) என்பவரைக் காதலித்தார்.



இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு ஒரு ஹோட்டலில் தனது முன்னாள் காதலி நாடின் ஹின்டர்ஹோல்சர் மற்றும் அவரது புதிய காதலன் புளோரியான் ஜானி ஆகிய இருவரும் ஒன்றாக இருப்பதை ஆன்ட்ரியாஸ் பார்த்தார். தனது காதலி தன்னைப் பிரிந்து வேறொரு நபருடன் மகிழ்ச்சியாக இருப்பதை கண்டு அவர் ஆத்திரம் அடைந்தார்.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆன்ட்ரியாஸ், நாடின் ஹின்டர்ஹோல்சரின் வீட்டுக்குச் சென்று அவரிடம் தகராறில் ஈடுபட்டார். அப்போது அங்கு வந்த நாடின் ஹின்டர்ஹோல்சரின் தந்தை ரூபர்ட் (59) ஆன்ட்ரியாஸை எச்சரித்து அனுப்பினார். இதனால் அங்கிருந்து கோபத்துடன் கிளம்பிய அவர், தனது வீட்டுக்கு வந்து துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மீண்டும் நாடின் ஹின்டர்ஹோல்சர் வீட்டுக்குச் சென்றார்.

வீட்டுக்குள் நுழைந்த அவர் நாடின் ஹின்டர்ஹோல்சரின் தந்தை ரூபர்ட், தாயார் ஆண்ட்ரியா (51) மற்றும் சகோதரர் கெவின் (25) ஆகியோரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ளார். பின்னர் வீட்டின் மேல்தளத்தில் ஒரே அறையில் தூங்கி கொண்டிருந்த நாடின் ஹின்டர்ஹோல்சர் மற்றும் புளோரியான் ஜானியை துப்பாக்கியால் சுட்டார். இதில் அவர்கள் இருவரும் படுக்கையிலேயே பிணமாகினர்.

இதையடுத்து, ஆன்ட்ரியாஸ் தாமாகவே பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, தான் ஐந்து பேரைக் கொலை செய்துவிட்டார் எனக் கூறி சரணடைந்தார். பொலிஸார் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.







# ராணி மகாராணி 2 ஆம் எலிசபெத் மகாராணி

எலியாரே எலியாரே எங்கே போகிறீர்?
எலிசபெத்து ராணியாரை பார்க்கப் போறேங்க.
என்ற பாலர் பருவப் பாடலில் முதன் முதலில் சந்தித்த இந்த எலிசபெத்து ராணி யார்?

இன்றும் வாழும் இங்கிலாந்து அரசி இந்த எலிசபெத் ராணி பற்றி அறியாதோர் இல்லை. கௌரவமான சின்னமாக உலகினில் கருதப்படும் பிரிட்டனின் முடியாட்சி சுமார் ஆயிரம் ஆண்டுகளை தாண்டிய வரலாற்றை கொண்டுள்ளது. இதன் பாரம்பரியங்கள் தனித்துவமானவை. இளவரசரோ இராணியோ ஆயுள் காலம்வரை அரியணையை விட்டு இறங்க வேண்டிய அவசியமில்லை. வரிசையில் அடுத்தவர் அரியணையைக் கைப்பற்றுவதற்கு பதவியில் இருப்பவரின் இறப்புவரை காத்திருக்க வேண்டும்.

யுத்தங்களும் நோய்களும் மலிந்த காலத்தில் அடுத்தடுத்து முடிக்குரிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன.

1952 பெப்ரவரி 06 அன்று, கணவர் இளவரசர் பிலிப்புடன் இளவரசி எலிசெபெத், தனது 26 வயதில், கென்யாவில் தங்கி இருந்த வேளை, அவரது தந்தையார் மன்னர் ஜோர்ஜ் VI, தனது 56 வது வயதில், சற்றும் எதிர்பாராத விதமாக, இரவு உறக்கத்தில் இறந்து விட்டார்.

முடிக்கு உரிமையாளராக வரிசையில் அடுத்து இருந்தவர் எலிசெபெத் II இளவயதில் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டி ஏற்பட்டது. இருபத்தி ஏழு வயதில் 1953 ஜூன் 02 அன்று முடி சூடிக்கொண்ட எலிசெபெத் இராணியார் 66 ஆண்டுகளாக முடியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். 93 வயதை தாண்டிவிட்ட மகாராணியார் சிறந்த ஆரோக்கியத்துடன் நிதானமாகத் திகழ்கிறார்.

பரிதாபம் என்னவென்றால் கடந்த ஆறு வருடங்களாக உலகினில் மணிவிழாக் காணும் அனைவரும் பிறக்கும்போது இவரே பிரிட்டிஷ் மகாராணி. பிரிட்டிஷ் வரலாற்றில் நீண்ட காலம் ஆட்சியை தக்க வைத்துக் கொண்டிருப்பவரும் இவரே. அடுத்து முடிக்குரிய வரிசையில் காத்திருக்கும் இவரது மூத்த மகன் இளவரசர் சாள்ஸ் 70 வயதை தாண்டிவிட்டார். இனி எப்போது



இவர் அரியணை ஏறி எவ்வளவு காலம் ஆள முடியுமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

சாள்ஸ் டயானா திருமணத்தை 1981 ஜுலை 29 அன்று உலகம் முழுவதும் தமது சொந்த வீட்டுத் திருமணமாக தொலைக்காட்சியில் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தது.

இனியும் இராணியால் அரச நிகழ்வுகளில் துடிப்பாக கலந்து கொள்ள எவ்வளவு காலம் இயலும்? இயலாத போது அவர் முடியை துறக்க தயாராகுவாரா என்கின்ற கேள்விகள் எழாமல் இல்லை.

பிறக்கும்போது இவர் முடிக்குரிய வரிசையில் இருக்கவில்லை. அதற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே தென்பட்டன. பெரிய தந்தையார் அரசர் எட்டாம் எட்வேட் காதலுக்காக முடியை 1936 இல் துறந்தபோது இவரது தகப்பனார் ஜோர்ஜ் அவர்களிடம் ஆட்சி வந்துவிட்டது. அப்போது இவரின் வயது பத்து. அப்போது அரியணை வாய்ப்பு வரிசையில் இவர் இடம் பிடித்துக்



கொண்டார். ஆறாம் ஜோர்ஜ் மன்னருக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்தவள் எலிசெபெத். அடுத்தவள் மார்கரெட்.

எனவே எலிசெபெத் மகாராணி யின் வாழ்க்கையின் பெரும்பங்கு பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரசியாக, அரச குடும்ப சம்பிரதாயங்களுக்கு உட்பட்டதாக, தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் என்று அமையாமல், சேவை அடிப்படையில், அரச குடும்ப சம்பிரதாயங்களை தனது நான்கு பிள்ளைகள், எட்டுப் பேரப் பிள்ளைகள் பல பூட்டப் பிள்ளைகள் வழுவாமல் பேணுவதை உறுதிப்படுத்துபவராக, குடும்ப கௌரவத்தை கடிந்தும் காப்பாற்றுபவராக என்று விரிவடைந்து செல்கிறது.

தனிப்பட்ட வாழ்க்கையில் சவாலாக சாள்ஸ் டயானா உறவில் விரிசல், சாள்ஸ் கமிலா உறவு, டயானாவின் மரணம், பேரப் பிள்ளைகளின் காதல் விவகாரங்கள் என்று பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்தவர் அவர். விமரிசனங்களுக்கு அப்பால் பிரிட்டிஷ் மக்கள் கொடுத்த ஆதரவு அவரை நிலைநிறுத்தி வந்திருக்கிறது. இனியும் மரபின்படி உயிருள்ளவரை இயலாமையிலும் முடி துறக்காமல் பணி செய்வதே குறிக்கோளாக அவரது எண்ணம் இருக்கிறது.

இவர் புதல்வர்களிடம் சில உத்தியோகபூர்வ மற்றும் அலுவலக கடமைகளைக் கையளிக்க முடியும் என்று எதிர்பார்க்கலாம். பிறக்கும்போது முடிக்குரிய வரிசையில் இல்லாத போதும் அரச குடும்ப வாரிசு அந்தஸ்து இருக்கத்தான் செய்தது. பெரியப்பா அரசன் அல்லவா?

மாளிகையில் தனிப்பட்ட முறையில் கல்வி, பாடங்களாக சரித்திரம், இலக்கணம், இலக்கியம், சங்கீதம் அடுத்து இரண்டாம் உலகப் போரில் பிரித்தானிய இராணுவத்தின் மகளிர் அணிப் பிரிவில் கடமைகள் என்று வாழ்க்கை நகர்ந்து கொண்டது. 1947 இல் இளவரசர் பிலிப் அவர்களை தனது 21 வது வயதில் திருமணம் செய்து கொண்டார். சாள்ஸ், ஆன், அன்றூ, எட்வேட் என நான்கு குழந்தைகளின் தாயும் ஆகிவிட்டார்.

ஐக்கிய இராச்சியம், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை என ஏழு பொதுநலவாய நாடுகளின் தலைவியாக திகழ்ந்தவர். பல நாடுகளின் முத்திரைகள் பணத் தாள்களில் இடம் பிடித்தவர். இன்றும் பிரிட்டன் நாடாளுமன்றத்தை சம்பிதாயபூர்வமாக தொடக்கி வைப்பவர். பல நாடுகள் இவர் காலத்தில் சுதந்திரம் பெற்றன. பல பிரிட்டிஷ் பிரதமர்களையும் ஐந்து பாப்பரசர்களையும் சந்தித்தவர்.

இரண்டாம் உலகப் போரின் போது இராச குமாரிகள் இருவரையும் பாதுகாப்பாக கனடாவிற்கு அனுப்ப ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. பிரிட்டன் அடிக்கடி விமானத் தாக்குதலுக்கு உள்ளானதால் ஏற்பட்ட நிலைமை அது.

அதனை மறுத்த இவரின் தாயார் முதலாவது எலிசபெத் மகாராணியார் நான் போகாதவரை பிள்ளைகளை தனித்து அனுப்ப இயலாது என்று திட்டவட்டமாக மறுத்து விட்டார். அரசர் வராதபோது தானும் போகப் போவதில்லை என்றும் நாட்டை விட்டு அரசர் எக்காரணமாகவும் வெளியேறப் போவதில்லை என்றும் தெளிவாகக் கூறிவிட்டார். கணவர் அரசர் ஜோர்ஜ் இருக்கும் இடமே குண்டு வீச்சிலும் தனக்கும் பிள்ளைகளுக்கும் அயோத்தி என்கின்ற நிலைப்பாட்டில் இருந்து அவர் விலகவில்லை.

1940 இல் யுத்த அவலங்களுக்கு வருத்தம் தெரிவித்து தனது பதின்நான்கு வயதில் BBCவானொலியில் உரையாற்றிய இன்றைய மகாராணி தனது வயதை ஒத்த சிறார்களின் அவலங்கள் குறித்து மிகுந்த வேதனையை வெளியிட்டமை இன்றும் பேசப் படுகிறது. சமூகத்தோடு கலந்து பழகி வாழ முடியாத அரச வாழ்விலும் சமூக வாழ்வியலின் பிரச்சினைகளை நன்கறிந்து தகுந்த அணுகுமுறைகளில் செயற்படும் அவரின் பண்பு போற்றத்தக்கது.

1942 இல் பிரிட்டிஷ் இராணுவ சேவையில் இணைந்து கொண்ட இவர் நாட்டுக்காக ஆற்றிய சேவை சிறப்பானது. 1945 இல் பெண்களுக்கான இராணுவப் பிரிவில் 230873 என்ற சேவை இலக்கத்தில் இணைந்து சாரதிப் பயிற்சியும் வாகன திருத்த பயிற்சியும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இன்றும் உலகினில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி, இலக்கத் தகடு இல்லாத வாகனமொன்றை பயன்படுத்தும் தகுதி உடையவர் இவர் ஒருவரே எனலாம்.

(இலங்கையிலும் சாரதி அனுமதிப் பத்திரம் இலக்கத் தகடு இல்லாமல் வாகனங்கள் ஓடுவது சர்வசாதாரணமாகி வருவது வேறு விடயம். பாடசாலைகளுக்கு குழந்தைகள் நான்கைந்தை ஸ்கூட்டியில் ஏற்றிவரும் எங்கள் உள்ளூர் மகா ராணிகள் பலரிடம் எந்த ஆவணமும் கிடையாது. எத்தகைய வீதி ஒழுங்கும் புரியாது)

இரண்டாம் உலகப் போரின் முடிவில் லண்டன் வீதிகளில் வெற்றிக் களிப்பில் மொய்த்த மக்கள் கூட்டத்தினுள் இவரும் சகோதரி மார்கரெட்டும் பெற்றோரின் அனுமதியுடன் தங்களை இனம் காட்டாது இணைந்து கொண்டனர். மக்களோடு மக்களாக கைகோர்த்து மக்கள் அலையில் அள்ளப்பட்ட இனிமையான அனுபவத்தை அவர் மிக ரசித்திருந்தார்.

இவர்களை மக்கள் அடையாளம் கண்டிருந்தால் மொய்த்துத் தள்ளிவிடுவார்கள் என்ற ஏக்கம் எழாமல் இருக்கவில்லையாம்.

1947 இல் தனது முதலாவது வெளிநாட்டுப் பயண

## பிரிட்டிஷ் முடியாட்சி

மாக பெற்றோருடன் தென்னாபிரிக்கா வந்த இவர், தனது 21வது பிறந்தநாளில் பொதுநலவாய நாடுகளுக்கான தனது உரையில் நீண்டதோ குறுகியதோ எதுவானாலும் எனது வாழ்நாள் முழுவதும் மக்களுக்கான அர்ப்பணிப்பு மிக்க சேவையினை ஆற்றுவதே நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தார். அந்த நோக்கம்




உண்மையாக இன்றுவரை அவரது ஆயுளும் நீண்டு கொண்டே செல்கிறது.

இளவரசர் பிலிப் அவர்களை எலிசபெத் 1934 (8வயது) இலும் 1937 (11வயது) இலும் சந்தித்து இருந்தார். மீண்டும் பதின்மூன்று வயதில் 1939 இல் அவரை சந்தித்தபோது காதல் மலர்ந்து கொண்டது. எட்டு வருடக் காதல் சில அரச மரபு போராட்டங்களுடன் 1947 இல் அவரது இருபத்தொரு வயதில் நிச்சயதார்த்தம் கண்டது. திருமணம் சிறப்பாக Westminster Abbey தேவாலயத்தில் இடம்பெற்றது.

(தொடரும்)

# கோட்டாவுக்கே சு.கவின் ஆதரவாம்: பொதுஜன பெரமுனவுக்கு அல்லவாம்!

## விளக்குகின்றார் கட்சிச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர

கொழும்பு,ஒக்.10

**சின்னம் தொடர்பில் பிரச்சினை உள்ளதுதான் என்ற போதிலும் கூட்டணி அமைப்பதற்கு அதனை சிக்கல்படுத்திக் கொள்வது தற்பொழுது அவசியமில்லையென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கானது மட்டுமேயன்றி, பொதுஜன பெரமுனவின் தாமரை மலர் மொட்டு சின்னத்துக்கு அல்லவெனவும் அவர் மேலும் கூறினார்.

பேச்சுக்குப் பெரும் தடையை ஏற்படுத்திய ஒன்றாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சின்னம் காணப்பட்டது. இந்தச் சின்னம் இந்தியப் பிரதமர் மோடியின் சின்னம் எனவும், இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் இந்தச் சின்னத்துக்கு எதிரானவர்கள் என்றெல்லாம் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களில் கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர்.

சகல இனங்களையும் அரவணைத்துச் செல்வதென்றால், இந்தச் சின்னம் மாற்றப்பட வேண்டும் என்பதில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுதியாக உள்ளதாகவும், பேச்சுகளின் போது பொதுஜன பெரமுனவிடம் சுதந்திரக் கட்சி இதனையே தெரிவித்து வந்தது எனவும் சுட்டிக்காட்டத்தக்கது.

# சிவாஜியைக் களமிறக்கியவர் பஸில் ராஜபக்ஷவேதானாம்!

## சிங்கள இணையத்தளத்தின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு.ஒக்.10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷவே வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தை ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கியுள்ளார் என சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்துக் கடுமையான பிரசாரத்தை மேற்கொள்ளும் பொறுப்பை, பஸில் ராஜபக்ஷ, சிவாஜிலிங்கத்திற்கு வழங்கியுள்ளார் எனவும் சிவாஜியின் இந்தப் பிரசாரத்தினால், சிங்கள மக்களைத் தூண்டி அதன் சாதகத்தை கோட்டாபயவுக்குப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கம் எனவும் அந்த இணையத்தளம் கூறியுள்ளது.

அத்துடன் சிவாஜிலிங்கம் 50 ஆயிரம் வாக்குகளை பெறுவார் எனக் கணக்கிட்டுள்ள பஸில், அவருடன் இணைப்பு நடவடிக்கைகளுக்கான பொறுப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிபால அமரசிங்கவுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், பஸில் ராஜபக்ஷவின் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு அதிகாரியாக சிறிபால அமரசிங்க இருந்து வருகிறார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிபால அமரசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சஜித்தின் முதலாவது கூட்டம் இன்று காலிமுகத் திடலில்!

## மூன்று லட்சம் பேர் திரளுவராம்

கொழும்பு.ஒக்.10

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் முதல் தேர்தல் பரப்புரைக் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் இன்று நடைபெறவுள்ளது.

இதில் ஐ.தே.க. மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்தப் பேரணியில் பெரும் எண்ணிக்கையான ஐ.தே.க. ஆதரவாளர்கள் பங்கேற்பார்கள் என்று பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மூன்று லட்சத்துக்கும் அதிகமான ஆதரவாளர்களை இந்தப் பேரணியில் பங்கேற்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ஐ.தே.கவின் அமைப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரு பொலிஸ் அதிகாரிகளுக்கு சேவை இடைநிறுத்த உத்தரவு!

தீவிரவாதத் தாக்குதல் தொடர்பான பொய்யான தகவல்கள் அடங்கிய கடிதம் ஒன்றை கொழும்பில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு அனுப்பி வைத்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்பு குறித்து பொய்யான மற்றும் உறுதிப் படுத்த முடியாத தகவல்கள் அடங்கிய கடிதம் ஒன்று கடந்த 02 ஆம் திகதி கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தினால் விசேட விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைகளில் தெரிய வந்த விடயங்களுக்கு அமைய பொய்யான தகவல்கள் அடங்கிய கடிதத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார் எனக் கூறப்படும் கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக செயற்படும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும், கோட்டை பொலிஸ் நிலைய நிர்வாக பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவரும் இவ்வாறு பணி நிலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.







# லீக் ஆட்டத்தில் வென்றது ஊரெழு றோயல் அணி

உரும்பிராய் திருக்குமரன் வி.க நடத்தி வருகின்ற சோபநாத் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது .

ஆட்ட நேர முடிவில் 03:00 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்றது.

றோயல் அணி சார்பாக ருசாந்தன் 02 , கஜகோபன் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.



# ஜாகீர்கானை அவமானப்படுத்தப் போய் தான் அசிங்கப்பட்ட ஹார்டிக் பாண்டியா!




இந்திய அணியின் முன்னாள் வீரரான ஜஷகீர் கானை, பிறந்தநாளில் அவமானப்படுத்தும் விதமாக வீடியோ வெளியிட்ட இளம் வீரரான ஹார்டிக் பாண்டியவை இணையத்தளவாசிகள் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான ஜாகீர் கான் நேற்று முன் தினம் தனது 41ஆவது பிறந்த நாளை வெகுவிமரிசையாக கொண்டாடினார்.

அவருக்கு முன்னாள் அணி வீரர்கள் மற்றும் தற்போதைய இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

அந்த வரிசையில் காயம் காரணமாக ஓய்வெடுத்து வரும் இளம் கிரிக்கெட் வீரர் ஹார்டிக் பாண்டியாவும் ட்விட்டரில் வாழ்த்து தெரிவித்தார். அவர் தனது பிறந்தநாள் பதிவில் ஜஷகீர் கானின் பந்துவீச்சில் ஒரு சிக்ஸர் அடிக்கும் வீடியோவை பதிவிட்டு, என்னை போல நீங்களும் இப்படி சிக்ஸர் அடிப்பீர்கள் என்று நம்புகிறேன் என பதிவிட்டிருந்தார்.

# 2019 – 2020 ஆண்டு சீசனிலிருந்து ஜேஸன் பெரேன்டோர்ப் விலகல்!



ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் மித வேகப் பந்து வீச்சாளரானஜேஸன்பெரேன்டோர்ப், 2019 -2020 ஆண்டு சீசனில் விளையாட மாட்டார் என கிரிக்கெட் ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

29 வயதான இடக்கை மித வேகப்பந்துவீச்சாளரானஜேஸன் பெரேன்டோர்ப், முதுகெலும்பு அறுவைச் சிகிச்சை செய்யவுள்ளதால், இந்த முடிவை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு இந்தியா அணிக்கெதிரான ரி – 20 போட்டியில் அறிமுகமாக சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை பெற்றுக்கொண்ட ஜேஸன்பெரேன் டோர்ப், கடந்த ஜனவரி மாதம் இந்தியா அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானார்.

இதன்பிறகு தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்த அவர், இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்றார்.

அவர், நடைபெற்று முடிந்த உலகக்கிண்ணத் தொடரில், சிறந்த பந்து வீச்சு பிரதியினையும் பதிவு செய்தார். அவர்லோட்ஸ்மைதானத்தில்நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில், 44 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன்பிறகு எவ்வித போட்டிகளிலும் விளையாடாத அவர், தற்போது முதுகெலும்பு அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கு முன்னதாக ஆஸ்திரேலியா அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பெட்டின்சன் மற்றும் நியூஸிலாந்தின் மெட் ஹென்ரி ஆகியோர் இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது உடுத்துறை செந்தமிழ் அணி

கிராஞ்சி செல்சிற்றி வி.க மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றி கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து பூநகரி துளிர்விடும் நட்சத்திரங்கள் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.



# கிரிக்கெட் போட்டியின் போதே மைதானத்தில் விழுந்து உயிரிழந்தார் நடுவர்!



கிரிக்கெட் போட்டி நடைபெற்று கொண்டிருந்தபோது மைதானத்தில் மாரடைப்பால் நடுவர் உயிரிழந்தமை சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கராச்சியில் உள்ள டீஎம்சி மைதானத்தில் நேற்றுமுன்தினம் கிளப் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

அப்போது போட்டியின் நடுவராக நசீம் ஷேக் (வயது – 52) என்பவர் செயல்பட்டார். அந்த சமயத்தில் நசீம் திடீரென மைதானத்தில் சுருண்டு விழுந்தார்.

உடனடியாக அவரை அம்புலன்ஸில் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்தமை சென்றனர்.

ஆனால் அவர் வழியிலேயே உயிரிழந்த நிலையில் மாரடைப்பால் உயிரிழந்தமை தெரியவந்தது.

இதனிடையே நசீம் ஏற்கனவே இதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு, ரிஷாத் தரப்புகளுடன் கூட்டுச் சேரும் எந்த வேட்பாளரையும் சு.க. ஆதரிக்கமாட்டாதாம்!

## இப்படிக் கூறுகின்றார் அக்கட்சியின் எம்.பி.திலங்க சுமதிபால

கொழும்பு,ஒக்.10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் றிஷாத் பதியுதீன் போன்ற நபர்களுடன் கூட்டு வைத்திருக்கும் எந்த வேட்பாளருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் ஆதரவு அளிக்க முடியாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிக்கமாட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இல்லாமல், தேசிய ஜனநாயக முன்னணியால் தேர்தல்களை எதிர்கொள்ள முடியாது.

கொள்கை முரண்பாடு காரணமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டு வைத்திருக்கின்ற எவருடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் இணங்கிப் போகமுடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ரிஷாத் பதியுதீன் போன்ற நபர்களுடன் கூட்டு வைத்திருக்கும் எந்த வேட்பாளருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் ஆதரவு அளிக்க முடியாது.

தீவிரவாதத்தை ஆதரித்தவர் எனக் கூறப்படும் ரிஷாத் பதியுதீன் போன்ற அமைச்சர்களுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடிமட்டத்திலிருந்தே குறிப்பிடத் தக்க எதிர்ப்பு எழுந்துள்ளது.

பொதுமக்கள் அவரை நம்பவில்லை, எனவே அவருடன் இணைந்த ஒரு வேட்பாளரை சுதந்திரக் கட்சியினால் ஆதரிக்க முடியாது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## வவுனியாவிலிருந்து 'ரஜட்ட ரஜனி' நேற்று புறப்பட்டது மாத்தறைக்கு

### 14 நாள் ஓய்வுக்குப் பின்னர்




இரண்டு வார காலமாக முன்னெடுக்கப்பட்ட ரயில் ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுமுன்தினம் மாலையுடன் நிறைவுக்கு வந்த நிலையில் நேற்றையதினம் வவுனியா ரயில் நிலையத்தின் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இதனையடுத்து 25ஆம் திகதி தொடக்கம் வவுனியாவில் தரித்து நின்ற ரஜரட்ட ரஜனி ரயில் அதிகாலை 3.35 மணியளவில் வவுனியாவிலிருந்து மாத்தறை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

அதிகாலையிலேயே ரயில்வே உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமுகமளித்திருந்ததுடன் பணிப்புறக்கணிப்பு காலப்பகுதியில் ஆசன முற்பதிவுகளை மேற்கொண்டிருந்தவர்கள் அவர்களது முற்பதிவுகளுக்கான பதிவுகளை இரத்து செய்ய சமுகமளித்திருந்தனர்.

அத்துடன், கொழும்பில் இருந்து தபால் ரயில், கடுகதி ரயில் என்பன வவுனியாவிற்கு வந்திருந்த அதேசமயம் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின. (இ - 100)










ஓட்டமாவடி பிரதேச செயலகமும், ஓட்டமாவடி பிரதேச சபையும் இணைந்து சூழல் பாதுகாப்புக்கான வளமாக்கல் திட்டம் என்னும் தொனிப்பொருளில் நாற்றுக்களை உற்பத்தி செய்தல் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி தேசிய பாடசாலை, ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயம், காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயம், மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓட்டமாவடி விவசாய திணைக்களத்தின் போதனாசிரியர் எம்.ஐ.எம்.ஜமால்டீன் வளவாளராகக் கலந்து கொண்டு நாற்றுக்களை உற்பத்தி செய்தல் தொடர்பான விளக்க கருத்துக்களை வழங்கினார்.

இதில் ஓட்டமாவடி பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikathir



# பூஜித், ஹேமசிறியின் பிணை ரத்து மேல் நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

## இருவரும் கைதாகும் நிலைமை

கொழும்பு,ஒக்.10

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் வழங்கிய பிணையை கொழும்பு மேல் நீதி மன்றம் இரத்துச் செய்து கட்டளை வழங்கியது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் வழங்கிய பிணை அனுமதிக் கட்டளையை ஆட்சேபித்து சட்டமா அதிபர் தாக்கல் செய்த சீராய்வு மனு மீதே கொழும்பு மேல் நீதிமன்றம் இவ்வாறு நேற்று புதன்கிழமை கட்டளை வழங்கியது.

இதன்மூலம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேம சிறி பெர்னாண்டோ, கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீளவும் விளக்கமறியலில் வைக்கப்படுவர்.



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஷி அறிக்கை தாக்கல் செய்தது.

தேவாலயங்களில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் குண்டுத் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளன என முன்னரே வழங்கப்பட்ட எச்சரிக்கைகள் விடயத்தில் உயர் அதிகாரிகளாக இருந்த இவர்கள், நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டது. இதன் அடிப்படையில் இவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

எனினும் அவர்கள் இருவரையும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் கடந்த ஜூன் 9ஆம் திகதி பிணையில் விடுவித்தது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேம சிறி பெர்னாண்டோ இருவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் விசாரணைகளை நிறைவு செய்யாத நிலையில் நீதிவான் வழங்கிய பிணை அனுமதிக் கட்டளையை நீக்குமாறு கோரி சட்டா மா அதி பரால் கொழும்பு மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

சட்ட மா அதிபரின் விண்ணப்பத்துக்கு அனுமதி யளித்த கொழும்பு மேல் நீதிமன்றம், நீதிவான் நீதிமன் றில் பிணை அனுமதிக் கட்டளையை இரத்துச் செய்து கட்டளை வழங்கியது.




ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவால் கல்குடா பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் ஓர் அங்கமாக ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலைக்கு) நுழைவாயில் அமைப்பதற்காக 59 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டதின் ஊடாக ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் கலாசார பிரதிபலிப்புக்களுடன் கூடிய நுழைவாயில் அமைப்பதற்காக 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்குடா பிரதேசத்தில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சார்பில் வட்டார பிரதிநிதியான எம்.அன்வர் மற்றும் கட்சியின் பிரதேச முக்கியஸ்தர்கள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவால் பாடசாலையின் அதிபர் ஹலீம் இஷ்ஹாகிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், அமைச்சின் இணைப்பு செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அனந்திக்கும் தனக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கோருகின்றார் சிவாஜிலிங்கம்!

கொழும்பு,ஒக்.10

அனந்தி சசிதரனுக்கும் தனக்கும் அச்சுறுத்தல் உள்ளதால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதனடிப்படையிலேயே அவர்கள் இருவருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு, தேர்தலுக்கு பொறுப்பான பொலிஸ் பிரிவின் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் வல்வெட்டித்துறை மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையங்களுக்கு உரிய அறிவுறுத்தல் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு நேற்று வழங்கப்படவிருந்தது என ஒரு தகவல் தெரிவித்தது.



ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானாவால் கல்குடா பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டட வேலைகளை பூரணப்படுத்துவதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரான எம்.ஐ.எம்.இம்தியாஸ் உட்பட கட்சியின் கல்குடா பிரதேச முக்கியஸ்தர்கள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானாவினால் பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்பட்டதுடன், மேற்படி பாடசாலையில் இருந்து இம்முறை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டியதுடன் பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், அமைச்சின் இணைப்பு செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










Executive Committee of CIRDAP Meeting விவசாய, நீர்ப்பாசன, கடற்றொழில் நீரியவள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சினால் ஏற்பாட்டில் கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது.

அமைச்சின் செயலாளர் ருவான் சந்திர தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி உத்தியோகபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் இந்தோனேசியா நாட்டின் எந்திரம் மற்றும் பொதுசேவைகள் உதவி அமைச்சர் கலாநிதி யுஷார்டோ ஹன்டோயுங்கோ (Dr.Yusharto Huntoyungo) விவசாய தொழில்நுட்பம் மேலதிக செயலாளர் கலாநிதி அஜந்த டீ சில்வா, விவசாய சீர்திருத்தத்தின் துணை செயலாளர் திருமதி.எமிலி ஓ. பாடிலா (Mrs.Emily O. Padilla) மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு இடம்பெற்ற கலந்துரையாடலில் பதினைந்து நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2019 இல் வெளியிடப்பெற்றது.